**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 24.04.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : **23.04.2018**

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 16 கர்ணம் சந்து மற்றும் வார்டு எண். 26 காட்டூர் காட்டுக்கொட்டாய் பகுதிகளிலுள்ள சின்டெக்ஸ் தொட்டிகள், தண்ணீர் குழாய்கள், திறப்பான்கள் (Gate Valves) பழுதுகளை சரிசெய்து தண்ணீர் வழங்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 30000/– நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 30000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(இ2/763/18)

**தீர்மானம் எண். 283**

அனுமதிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சி குடிநீர் விநியோகப் பணிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களது ஆணையின்படி, பழநி நகராட்சி நகர்நல அலுவலர் 17.4.18–இல் ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, குடிநீர் குளோரின் அளவுகளை கண்காணிக்க மேல்நிலைத் தொட்டி நீரேற்று குழாய் மற்றும் விநியோகக் குழாய்களில் (Inlet and outlet) தண்ணீர் குழாய் (water tap) அமைக்க அறிவுறுத்தியுள்ளார். அதன்படி நகராட்சி மேல்நிலைத் தொட்டி நீரேற்று மற்றும் வெளியேற்றுக் குழாய்களில் குடிநீர் குழாயமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 6500/– நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ஆய்வு அலுவலர் அறிவுரையின்படி மேல்நிலைத் தொட்டிகளில் தண்ணீர் குழாய் அவசியம் கருதி அமைக்கப்பட்ட செலவினம் ரூ. 6500/– மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(இ2/766/18)

**தீர்மானம் எண். 284**

அனுமதிக்கப்பட்டது

(3) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தில் அசல் மதிப்பீட்டில் 10000 எண்ணிக்கையிலான வீட்டு கழிவுநீர் இணைப்புகள் இணைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது வரை 5606 இணைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முழுமையாக முடிந்தவுடன் அனைத்து கழிவுநீர் இணைப்புகளையும் இணைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, பயனாளிகளால் நிதி நிலைமை காரணம் காட்டி கழிவுநீர் இணைப்புகளை

பாதாள சாக்கடையுடன் இணைக்க இயலாத வீட்டு இணைப்புகள் 15000 எண்ணிக்கை என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 15000 எண்ணிக்கையிலான கழிவுநீர் வீட்டு இணைப்புகளை பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் இணைக்கவும், அதற்கான வீட்டின் உட்புறத்தில் குழாய் பதித்து சேம்பர் கட்டி இணைத்தல் முதலான பணிகளை மேற்கொள்ளவும், இரண்டு பகுதிகளாக பணி மேற்க்கொள்ள கீழ்க்கண்டுள்ளவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1) | நகராட்சிப் பகுதிகளிலுள்ள கழிவுநீர் மண்டலம் 1,3 மற்றும் 5 ஆகிய மண்டலங்களிலுள்ள 8500 எண்ணிக்கையிலான குடியிருப்புகளுக்கு உட்புற கழிவுநீர் இணைப்புகள் ஏற்படுத்துதல். | ரூ. 600.00 இலட்சங்கள் |
| 2) | நகராட்சிப் பகுதிகளிலுள்ள கழிவுநீர் மண்டலம் 2,4,5A மற்றும் 6 ஆகிய மண்டலங்களிலுள்ள 6500 எண்ணிக்கையிலான குடியிருப்புகளுக்கு உட்புற கழிவுநீர் இணைப்புகள் ஏற்படுத்துதல். | ரூ. 450.00 இலட்சங்கள் |
| | **மொத்தம்** | **ரூ.1050.00 லட்சங்கள்** |

இத்தொகையினை ஈடு செய்ய இந்நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால் இம் மதிப்பீட்டுத் தொகைக்கான செலவினத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடன் பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கவும், இணைப்புகள் வழங்கிய பிறகு குடியிருப்பு உரிமையாளர்களிடம் இருந்து தவணை முறையில் இத்தொகையினையும் மற்றும் முன்வைப்புத் தொகையினையும் பயனீட்டாளர் கட்டணத்துடன் சேர்த்து வசூல் செய்து கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** இந்நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால் இம் மதிப்பீட்டுத் தொகை ரூ. 1050.00 இலட்சம் செலவினத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடன் பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கவும், இணைப்புகள் வழங்கிய பிறகு குடியிருப்பு உரிமையாளர்களிடம் இருந்து தவணை முறையில் இத்தொகையினையும், மற்றும் முன்வைப்புத் தொகையினையும் பயனீட்டாளர் கட்டணத்துடன் சேர்த்து வசூல் செய்து கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கோரும் முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/804/18)

**தீர்மானம் எண். 285**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடங்கள், பொதுக் கழிப்பிடம் மற்றும் பள்ளி கழிப்பிடங்கள் மொத்தம் 20 கழிப்பிடங்களை தனியார் சேவை அமைப்புகள் மூலம் கட்டணம் ஏதும் வசூலிக்காமல் இலவசமாக சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க உத்தேச செலவினம் ரூ. 1200000/–க்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 266 நாள் 26.03.2018–இல் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி கழிப்பிடங்களை சேவை அடிப்படையில் இலவசமாக பராமரிக்க விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் 5.4.18–இல் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு

| வ. எண். | சேவை அமைப்பின் பெயர் | கழிப்பிடம் 1–க்கு மாதம் 1–க்கு பராமரிப்புக் கட்டணம் |
|---|---|---|
| 1) | Shubham Ganga Seva Sansthan, Floor No. 304, | ரூ. 5000/– |

| | | |
|---|---|---|
| | B Block, Aravind Arkavathi, Manjunatha Layout, Devasandra Road, K.R.Puram, Bangalore – 560 036 | |
| 2) | Indian Bhumi Paryavaran, Vikas Sansthan, 21, Sombandkara Street Ist floor, Chidambaram – 608 001 | ரூ. 7000/– |
| 3) | Royal Institute of Sanitation, 8 Second Floor, First Street, Sevavinayakar Street, Thiru Nagar, Katpadi, Vellore – 632 006 | ரூ. 6500/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற 3 (மூன்று) விலைப்புள்ளிகளில் வ.எண். 1–இல் கண்டுள்ள Shubham Ganga Seva Sansthan, Bangalore – 560 036 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி மற்ற இரண்டு விலைப்புள்ளிகளைவிட குறைவாக உள்ளதால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/535/18)

**தீர்மானம் எண். 286**

அனுமதிக்கப்பட்டது

(5) இராசிபுரம் நகராட்சி குடிநீர் விநியோகம் குறித்த விவர வரைபடம் (Zonetion Map) AO அளவில் கலர் வரைபடம் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரக ஆய்விற்கு அனுப்ப Auto Cad Drawing தயார் செய்ய ஆகும் செலவினம் ரூ. 8000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/218/18)

**தீர்மானம் எண். 287**

அனுமதிக்கப்பட்டது

(6) இராசிபுரம் நகராட்சி அண்ணாசாலைப் பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறை சாலைகளை அகலப்படுத்துவதால் அண்ணாசாலை ஆழ்துளைக் கிணற்றிலிருந்து காமராஜர் நகர் தண்ணீர் செல்லும் 90 mm PVC குழாய்க்கு பதிலாக 90 mm HDPE குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட ரூ. 50000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/810/18)

**தீர்மானம் எண். 288**

அனுமதிக்கப்பட்டது

(7) இந்நகராட்சிக்குட்பட்ட சத்துணவு மையங்களிலுள்ள சமையல் கூடங்களுக்கு வெள்ளை அடிக்கவும் மற்றும் சிறு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளவும் 18.4.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் வருமாறு :

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், தட்டான்குட்டை ரோடு, இராசிபுரம். | ரூ. 70000/– | 0.05 % | – |
| 2 | ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், இராசிபுரம். | | – | 2.25 % |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.05 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(சி4/2248/17)

**தீர்மானம் எண். 289**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சி உரக்கிடங்கிலுள்ள குப்பைகளை சமன்படுத்த JCB வாகனத்தை இயக்க தனியார் மூலம் தற்காலிக ஓட்டுநர் 1 எண்ணிக்கை பணியில் அமர்த்திக் கொள்ள 18.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விவரம் |
|---|---|---|
| 1) | ஸ்ரீ நடராஜன் எர்த் மூவர்ஸ், 1/124, பாரப்பட்டி, போடிநாயக்கன்பட்டி – 637 412 இராசிபுரம் வட்டம் | நாள் 1–க்கு ரூ. 384/–<br>மாதம் 1–க்கு ரூ. 9984/–<br>ஆறு மாதத்திற்கு ரூ. 59904/– |
| 2) | ரோஷினி எர்த் மூவர்ஸ், சமயபுரம் கோவில் அருகில், போடிநாயக்கன்பட்டி – 637 412 இராசிபுரம் வட்டம் | நாள் 1–க்கு ரூ. 410/–<br>மாதம் 1–க்கு ரூ. 10660/–<br>ஆறு மாதத்திற்கு ரூ. 63960/– |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1–இல் கண்டுள்ள ஸ்ரீ நடராஜன் எர்த் மூவர்ஸ், 1/124, பாரப்பட்டி, போடிநாயக்கன்பட்டி என்பவர் ஒப்பந்தப்புள்ளி நாள் 1–க்கு ரூ. 384/– என்பது மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்துள்ள விலை விவரத்தைவிட குறைவாகவும், மற்ற ஒப்பந்தப்புள்ளியைவிட குறைவாகவும் உள்ளதால் ஸ்ரீ நடராஜன் எர்த் மூவர்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(எச்1/151/18)

**தீர்மானம் எண். 290**

அனுமதிக்கப்பட்டது

(9) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான JCB TN 28 Z 0778 JD–இல் உள்ள கீழ்க்கண்ட பழுதுகள் சரிசெய்ய வேண்டி உள்ளது.

1) இன்ஜின், கியர் பாக்ஸ் சம்ப் பேக்கிங்
2) வால்வு டோர் பேக்கிங்

3) ஏர் பில்டர் மாற்றுதல்
4) ஹைட்ராலிக் ஆயில் பில்டர் மாற்றுதல்
5) கிரவுன் ஆயில், கியர் பாக்ஸ் ஆயில், இன்ஜின் ஆயில் மாற்றுதல்
6) பிரண்ட் ரோடர் மெயில் பிஸ்டன் சீல் மாற்றுதல்
7) டிரைவிங் மெயின் சீல், சிலிண்டர் சீல் மாற்றுதல்
8) ரேடியேட்டர் மற்றும் காலர் சர்வீஸ் செய்தல்
9) புல் கிரீஸ் நிப்பில் பின் செக்கப் செய்தல்
10) இன்ஜின் வால்வு செக்கப் செய்தல்
11) பேக் எக்ஸிகேட்டர் மெயின் ரேம், பக்கெட் ரேம் சீல் மாற்றுதல்
12) புல் வாட்டர் சர்வீஸ்

மேற்கண்ட பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 125000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/837/18)

**தீர்மானம் எண். 291**

அனுமதிக்கப்பட்டது

( 10 ) இராசிபுரம் நகரிலுள்ள அருள்மிகு கைலாசநாதர் மற்றும் அருள்மிகு பொன் வரதராஜ பெருமாள் ஆகிய திருக்கோவில்களின் சார்பாக திருத்தேரோட்டம் நடைபெற உள்ளதால் குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை சீரமைக்க சிமெண்ட் ஒட்டுப் பணிகள் செய்ய ரூ. 5.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி ரூ. 5.00 லட்சத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/855/18)

**தீர்மானம் எண். 292**

அனுமதிக்கப்பட்டது

( 11 ) தேர்தல்—மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் நேரடி அறிவுரையில் BLO NET ONLINE DATA ENTRY பணியை விரைந்து முடிக்க 5—ற்கு மேற்பட்ட DATA ENTRY OPERATOR —களைக் கொண்டு விரைந்து முடிக்க தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி DATA ENTRY OPERATOR —களுக்கு பதிவு 1—ற்கு ரூ. 1/— வீதம் 37000 x 1 = 37000/— வழங்க உத்தேச செலவினம் ரூ. 37000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(அ1/1549/15)

**தீர்மானம் எண். 293**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் தினக்கூலிப் பணியாளர்களாக பணிபுரிந்த காலத்தில் 50% பணிக்காலத்தினை ஓய்வூதியத்திற்கு எடுத்துக் கொள்ளவும் GPF —ற்கு மாற்றம் செய்யக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் தொடர்ந்துள்ளனர். மேற்படி

வழக்கு எண். நீதிப்பேராணை எண். 32529/17, 32530/17, 32531/17, 32642/17, 33489/17, 33490/17, 33491/17 ஆகிய ஏழு வழக்குகளை திரு எம். ஏழுமலை, அரசு வழக்கறிஞர் அவர்களின் மூலமாக வக்காலத்து தாக்கல் செய்து வழக்கினை ஏற்று நடத்தி வருகிறார் மேற்படி வழக்குக் கட்டணம் திரு எம். ஏழுமலை, அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கவும் 7 x 10000 = 70000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/2932/17)

**தீர்மானம் எண். 294**

அனுமதிக்கப்பட்டது

( 13 ) இந்நகராட்சி தெரு விளக்குகளை இயக்கம் மற்றும் பராமரிப்பு செய்ய தேவைப்படும் மின் உபகரணங்கள் அலுவலக இருப்பில் இல்லாத காரணத்தால் தெரு விளக்குகளை உடன் சரிசெய்து எரிய வைக்க இயலவில்லை. மேலும், தெரு விளக்கு உபகரணங்கள் சப்ளை 2 முறை ஒப்பந்தப்புள்ளிக் கோரியும் எவரும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கவில்லை. எனவே, அவசரத் தேவைக்காக பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி, சேலம் அவர்களிடத்தில் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி ரூ. 53014/–க்கு பெறப்பட்டது. மேற்படி செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் ரூ. 53014/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியத்தைக் கருதி தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி மின் உபகரணங்கள் பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி, சேலம் அவர்களிடத்தில் கொள்முதல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/286/18)

**தீர்மானம் எண். 295**

அனுமதிக்கப்பட்டது

( 14 ) இராசிபுரம் நகராட்சியில் 2018–2021–ஆம் ஆண்டிற்கான குத்தகை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிப்பு இரண்டு தினசரி நாளிதழில் வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. விளம்பரம் 2 தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்த வகையில் பிரைட் அட்வர்ஸ்டிங் நிறுவனத்திலிருந்து ரூ. 39916/–க்கு பில்பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, பிரைட் அட்வர்ஸ்டிங் நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 296**

அனுமதிக்கப்பட்டது

( 15 ) இராசிபுரம் நகராட்சியில் 2018–19–ஆம் நிதியாண்டிற்கு நகராட்சி ஆணையாளர் மற்றும் அலுவலர்கள் அலுவலகப் பணிகள் காரணமாக வெளியூர் பயணம் மேற்கொள்வதற்கு அரசு விதிகளின்படி அனுமதிக்கப்பட்ட பயணப்படி அவ்வப்போது பட்டியல் பெற்று வழங்கவும்

அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 300000/– (ரூபாய் மூன்று லட்சம்) செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எப்1/659/18)

**தீர்மானம் எண். 297**

அனுமதிக்கப்பட்டது

(16) அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 03.07.2007–இன்படி, 9 ஆண்டுகள் நிறைவுற்ற குத்தகை இனங்களுக்கு அங்காடி மதிப்பீட்டில் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து வாடகை நிர்ணயம் செய்ய தெரிவித்துள்ளதன் அடிப்படையில் இராசிபுரம் நகராட்சிக்கு சொந்தமான 207 கடைகளுக்கு மறு மதிப்பீடு செய்து வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு குத்தகைதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கி அவர்களின் ஒப்புதல் கடிதம் கோரப்பட்டது. ஒப்புதல் கடிதம் வழங்காத குத்தகைதாரர்களின் கடைகளுக்கு பகிரங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு இரண்டு தினசரி நாளிதழில் வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பு கடிதம் இரண்டு தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டது. செய்தி வெளியிடப்பட்ட பிரைட் அட்வர்ஸ்டிங் நிறுவனம் அதற்குண்டான பில் தொகை ரூ. 31706/– பில்பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வழங்க மன்றப்பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/1608/17)

**தீர்மானம் எண். 298**

அனுமதிக்கப்பட்டது

(17) வார்டு மறு வரையறை ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 3174/17/ தே.பொ.1–2 நாள் 5.10.2017 மற்றும் 19.10.2017–இல் 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் நகராட்சிப் பகுதியிலுள்ள வார்டுகளின் எல்லைகளை மறு வரையறை செய்து முன்மொழிவுகள் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள 27 வார்டுகளில் எல்லையினை மறு வரையறை செய்ததை திருத்தம் செய்து மறுபடியும் நகர வரைபடம் மற்றும் வார்டு வரைபடம் மற்றும் விவர தொகுப்பினை நகல் எடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களுக்கு 10 தொகுப்பும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு 2 தொகுப்பும், தேர்தல் ஆணையம் அலுவலகம், சென்னை அவர்களுக்கு 2 தொகுப்பும் தயார் செய்ததற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 35500/– (ரூபாய் முப்பத்தைந்தாயிரத்து ஐநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/3037/17)

**தீர்மானம் எண். 299**

அனுமதிக்கப்பட்டது

(18) இராசிபுரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர்அவர்களது ஆய்வுக் கூட்ட அறிவுரையின்படி 31.07.2018 தேதிக்குள் இந்நகராட்சியில் 6200 குடிநீர் இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பயனாளிகளின் நிதிநிலைமையினைக் கருதி, குடிநீர் இணைப்பு வழங்க ஒரு இணைப்பிற்கு `. 3900/– வீதம் 6200 குடிநீர் இணைப்புகளுக்கு `. 246.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. நகராட்சியின் நிதிநிலைமையினைக் கருதி, மதிப்பீட்டுத் தொகை `. 246.00 இலட்சத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்தில் (TUFIDCO) வட்டியில்லா கடன்தொகையாகப் பெற்று பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. இத்தொகையினை முன்வைப்புத் தொகையுடன் சேர்த்து தவணை முறையில் வசூல் செய்து கொள்ளவும், பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** அ) நகராட்சி நிதிநிலையினைக் கருதி `. 246.00 இலட்சம் TUFIDCO நிறுவனத்தில் வட்டியில்லா கடனாகப் பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் இணைப்புக் கட்டணம் மற்றும் முன்வைப்புத் தொகையினை பயனாளிகளிடம் தவணை முறையில் வசூலித்துக் கொள்ளவும், அதற்கான பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/218/18)

**தீர்மானம் எண். 300**

அனுமதிக்கப்பட்டது

(19) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க அரசாணை (டி) எண். 492, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 19.9.13–இல் ரூ.5542.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு இத்திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.. இத்திட்ட நிதிப்பகிர்வு விவரங்கள்

| | | |
|---|---|---|
| ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் IUDM | – | ரூ. 4346.00 இலட்சம் |
| நகராட்சி பங்குத் தொகை | – | ரூ. 1196.00 இலட்சம் |
| **மொத்தம்** | – | **ரூ.5542.00 இலட்சம்** |

நகராட்சி பங்குத் தொகை ரூ. 1196.00 இலட்சத்தில் ரூ. 6.00 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகை ரூ. 1190.00 இலட்சம் வழங்கப்பட வேண்டும். பாதாள சாக்கடை திட்டப் பணிகள் 75% முடிவுற்று 31.10.2018 தேதிக்குள் முடிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது நகராட்சியில் போதிய நிதி இல்லாததால் ரூ. 1190 இலட்சத்தினை அரசு மான்யமாக பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** நகராட்சி நிதிநிலையினைக் கருதி நகராட்சி பங்குத் தொகை ரூ. 1190.00 இலட்சம் அரசு மான்யமாக வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/804/18)

**தீர்மானம் எண். 301**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/– ப. கிருஷ்ணமூர்த்தி,
தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.